பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 03 2026** **7 15**

புதன்கிழமை காலை

ஆகாஷவாணி

**(Tune)**

செய்திகள் - வாசிப்பவர் - மிருதுளா

தலைப்புச் செய்திகள்

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி கேரளத்தில் 10 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

**2.** நாட்டில் வேளாண்துறையை வலுப்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக வேளாண் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

**3.** சூரிய மின்சக்தி மூலமான நீர்ப்பாசனம் நாட்டின் வேளாண்துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

**4.** ஈரானுக்கு எதிரான தாக்குதல் மேலும் தீவிரம் அடைந்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

**5.** உலக ஃபியூச்சர்ஸ் கோப்பை குத்துச்சண்டை போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் 5 இந்திய வீரர்கள் வெற்றி பெற்றனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி கேரளத்தில் 10 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இன்று காலை எர்ணாகுளம் செல்லும் அவர், கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பாரத் பெட்ரோலியம் நிறுவனம் சார்பில் அமைக்கப்பட உள்ள பாலி ப்ரொப்பலின் ஆலைக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

இத்திட்டம் சுமார் 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

4 ஆயிரத்து 790 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் கேரளத்தில் அமைக்கப்பட்டுள்ள 23 சாலைகளையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

சோரனூர் - நிலம்பூர் ரயில் பாதை மின்மயமாக்கல் திட்டத்தை அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் கேரளத்தில் மேம்படுத்தப்பட்ட 3 ரயில் நிலையங்களை அவர் திறந்து வைக்க உள்ளார்.

கொல்லம் மாவட்டத்தின் மேற்கு கல்லாராவில் அமைக்கப்படும் 50 மெகாவாட் மிதக்கும் சூரிய மின் திட்டத்திற்கும் திரு. நரேந்திர மோடி அடிக்கல் நாட்டுகிறார்.

இதைத் தொடர்ந்து இன்று மாலை திருச்சி வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பின்னர் திருச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் திரு. நரேந்திர மோடி உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

நடப்பாண்டில் கரீப் மற்றும் ரபி பருவ பயிர் உற்பத்தி தொடர்பான மதிப்பீடுகளை வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

கரீப் பருவத்தில் ஆயிரத்து 741 லட்சம் மில்லியன் டன்னும், ரபி பருவத்தில் ஆயிரத்து 745 லட்சம் மில்லியன் டன்னும் பயிர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

அரிசி, கோதுமை, எண்ணெய்வித்துக்கள், நிலக்கடலை, சிறுதானியங்கள் உள்ளிட்ட அனைத்து பயிர் வகைகளின் உற்பத்தியும் கடந்த ஆண்டைவிட அதிகம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், உற்பத்தியையும், விவசாயிகளின் வருமானத்தையும் அதிகரிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வேளாண்துறையை வலுப்படுத்த மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

சூரிய மின்சக்தி மூலமான நீர்ப்பாசனம் நாட்டின் வேளாண்துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

வேளாண்துறையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு தொடர்பாக புதுதில்லியில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய அவர், இந்த எரிசக்தி பயன்பாடு நிலையான விவசாயத்தை ஊக்குவிக்கும் என்றார்.

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டில் 81 ஜிகா வாட்டாக இருந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி தற்போது 275 ஜிகா வாட்டாக அதிகரித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

புதைபடிவமற்ற பொருட்களில் இருந்து எரிசக்தி உற்பத்தியை ஊக்குவிக்க தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே இலக்குகள் எட்டப்படுவதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரானுக்கு எதிரான தாக்குதல் மேலும் தீவிரம் அடைந்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

கடந்த 12 மணி நேரத்தில் தாக்குதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெண்டகன் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் பெருமளவு குறைந்துள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் திரு. Pete Hegseth கூறியுள்ளார்.

<<<<>>>>

மேற்கு ஆசிய நிலவரம் குறித்து ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு சையது அப்பாஸ் அராக்ச்சியுடன் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இருதரப்பினரும் தொடர்ந்து தகவல் தொடர்பை பராமரிக்க இந்தப் பேச்சுவார்த்தையின்போது முடிவு செய்யப்பட்டதாக திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் மற்றும் அமெரிக்க, இஸ்ரேல் படைகளுக்கு இடையே மோதல் தொடங்கிய பின்னர் ஈரான் வெளியுறவு அமைச்சருடன் திரு. ஜெய்சங்கர் மூன்றாவது முறையாக பேச்சு நடத்தியுள்ளார்.

தென்கொரியா மற்றும் ஜெர்மனி வெளியுறவு அமைச்சர்களுடனும் நேற்று அவர் தொலைபேசியில் பேச்சு நடத்தினார்.

இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், மேற்காசிய சூழல் குறித்தும் இரு நாடுகளின் அமைச்சர்களுடன் தாம் ஆலோசனை நடத்தியதாக திரு. ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து விமானப் போக்குவரத்துத் துறை உன்னிப்பாக் கண்காணித்து வருவதாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

சேவைகளை தொடர்ந்து வழங்குவது மற்றும் பயணிகள் பாதுகாப்பு ஆகிய இரண்டுக்கும் முக்கியத்தும் அளிக்கப்படும் என்று அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் தொடங்கிய பின்னர் **45** விமானங்கள் மேற்காசியாவில் இருந்து இந்தியாவிற்கு வந்துள்ளதாகவும், இதில் **7** ஆயிரத்து **400** பயணிகள் தாயகம் திரும்பியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

நிர்வாகத்தை மேம்படுத்துவதில் மூத்த குடிமக்களின் பரிந்துரைகள் முக்கியப் பங்காற்றுவதாக பணியாளர் நலன் மற்றும் ஓய்வூதியத் துறை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஓய்வூதியதாரர்கள் சங்க கூட்டத்தில் பேசிய அவர், ஓய்வூதியதாரர்களின் குறைகளைக் களைய அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றார்.

<<<<>>>>

நாட்டின் ஜவுளித்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஜவுளித்துறை மறுசுழற்சி தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், நாட்டில் ஜவுளி மறுசுழற்சி சந்தை அடுத்த 4 ஆண்டுகளுக்குள் மூன்றரை பில்லியன் டாலரை எட்டும் என்று கூறினார்.

ஜவுளித்துறையில் முதலீடுகளை அதிகரிக்கவும், உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்றவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திரு. கிரிராஜ் சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் குஜராத்தின் சில இடங்களில் இன்று வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கொங்கன், விதர்பா மற்றும் ராஜஸ்தானிலும் கடும் வெப்பம் நிலவும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசம், அசாம், மேகாலயா ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிர ஆளுநராக திரு. ஜிஷ்னுதேவ் வர்மா நேற்று பதவியேற்றார்.

மும்பை மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. தேவேந்திர குமார் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

<<<<>>>>

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு ஆப்பிரிக்க நாடான மொசாம்பிக்குக்கு தேவையான உதவிகளை இந்தியா செய்து தரும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், மனிதாபிமான அடிப்படையில் 500 டன் அரிசி மற்றும் 10 டன் அத்தியாவசியப் பொருட்கள் இந்திய

கடற்படை கப்பல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடாரங்கள், மறுவாழ்வுக்கான அடிப்படைப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், சுகாதாரத்தை பாதுகாப்பதற்கான பொருட்கள் உள்ளிட்டவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

86 டன் உயிர் காக்கும் மருந்துகள் ஏற்கனவே மொசாம்பிக்குக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

உலக ஃபியூச்சர்ஸ் கோப்பை குத்துச்சண்டை போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் 5 இந்திய வீரர்கள் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 50 கிலோ எடைப் பிரிவில் சந்திரிகா புஜாரியும், 54 கிலோ எடைப் பிரிவில் ஜெயஸ்ரீயும் வெற்றி பெற்றனர்.

60 கிலோ எடைப் பிரிவில் பிராச்சி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றார்.

ஆடவர் **50** கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் எல். அம்பேத்கரும், **48** கிலோ எடைப் பிரிவில் **Gunjan**-னும் வெற்றி பெற்றனர்.

----------------

உலகக் கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று வேல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இப்போட்டி இரவு **7.30** மணிக்கு தொடங்குகிறது.

-------------

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரங்கிரெட்டி - சிராக் ஷெட்டி இணை அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, சிங்கப்பூரின் **Koh - Kubo** இணையை **21-19, 21-19** என்ற செட் கணக்கில் வென்றது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் எம்.ஆர். அர்ஜுன் - அம்சகருணன் இணை, தைவான் இணையை **21-16, 24-22** என்ற செட் கணக்கில் வென்றது.

--------------

ஆசியக் கோப்பை மகளிர் கால்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் சீன தைபேய் அணி, இந்தியாவை வென்றது.

சிட்னியில் நடைபெற்ற இப்போட்டியில் **3-1** என்ற கோல் கணக்கில் சீன தைபேய் அணி வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**